**Google Meet**

**Google Ireland Limited ("Google")**
Gordon House, Barrow Street, Dublin 4, Ireland
https://support.google.com/

*டிசம்பர் 21, 2020 முதல் நடைமுறைக்கு வருகிறது*

**ஒப்பந்தச் சுருக்கம்**

- ஐரோப்பிய ஒன்றியச் சட்டத்திற்கு இணங்கும் வகையில் எங்கள் சேவை தொடர்பான சலுகையின் முக்கிய அம்சங்களை இந்த ஒப்பந்தச் சுருக்கம் விவரிக்கிறது[1].
- பல்வேறு சேவை தொடர்பான சலுகைகளுக்கு இடையேயான ஒப்பீட்டைச் செய்ய உங்களுக்கு உதவுவதே இதன் நோக்கமாகும்.
- எங்கள் சேவை தொடர்பான சலுகையைப் பற்றிய முழு விவரங்கள் பிற ஆவணங்களில் உள்ளது.

**சேவைகள்**
Google Meet என்பது வீடியோ தகவல்தொடர்புச் சேவையாகும், இது இணைய இடைமுகம் அல்லது ஆப்ஸ் வழியாக பல சாதனங்களிலும் இயங்குதளங்களிலும் வழங்கப்படுகிறது. Google Meet வழியாகத் தொடர்புகொள்ள, இணைய இணைப்பு தேவை. Google Meet சேவையைப் போதுமான திறனோடும் கவனத்தோடும் Google வழங்குகிறது. இருப்பினும் சேவையின் தரம் குறைவதில்லை.

**விலை**
Google Meet இலவசமாக வழங்கப்படுகிறது. அதன் உபயோகம் Googleளின் சேவை விதிமுறைகளுக்கு (https://policies.google.com/terms தளத்தில் உள்ளது) உட்பட்டதாகும்.

**கால அளவு, புதுப்பித்தல் & நிறுத்துதல்**
நீங்கள் Google Meetடில் பதிவு செய்தவுடன் அதைப் பயன்படுத்தலாம். குறிப்பிட்ட கால அளவிற்கு Google Meetடைப் பயன்படுத்த வேண்டும் என கட்டாயமில்லை. எப்போது வேண்டுமானாலும் நிறுத்திக் கொள்ளலாம்.

**மாற்றுத் திறனுடைய பயனர்களுக்கான அம்சங்கள்**
Google Meetடில் ஸ்க்ரீன் ரீடரையும் கீபோர்டு ஷார்ட்கட்களையும் பயன்படுத்தலாம், பேசப்படும் வசனங்களைத் திரையில் காட்டலாம். மேலும் தகவல்களுக்கு https://www.google.com/accessibility/ தளத்தைப் பார்க்கவும்.

**பிற தொடர்புடைய தகவல்கள்**
வாடிக்கையாளர் உதவி மையம்: Google Meetடுக்கான உதவி/ஆதரவுhttps://support.google.com/ **தளத்தில் உள்ளது.**
புகார்கள்: உங்கள் புகார்களை https://ec.europa.eu/consumers/odr/main/?event=main.adr.show2 தளத்தில் உள்ள, புகாருக்கான வேறொரு தீர்வு வழங்குநரிடமோ உங்கள் நாட்டின் சட்டப்பூர்வத் தேவைக்கேற்ப வேறு வழங்குநரிடமோ எடுத்துச் செல்லலாம். மேலும் தகவல்களுக்கு Google சேவை விதிமுறைகளைப் பார்க்கவும்.
பாதுகாப்பைப் பாதிக்கக்கூடிய சம்பவங்கள்:பாதுகாப்பு அல்லது தனியுரிமை மீறல் நிகழ்வுகளைத் தாமதமின்றிக் கண்டறிந்து பதிலளிக்கும் வகையில் மிகுந்த விழிப்புணர்ச்சியுடன் கூடிய 24/7 பாதுகாப்பு மீறல் நிகழ்வுகள் மேலாண்மைத் திட்டத்தை Google பராமரிக்கிறது. ஆன்லைன் பாதுகாப்பை நிர்வகிக்க உங்களுக்கு உதவும் வகையில் Google பாதுகாப்புச் சரிபார்ப்புப் பட்டியலையும் Google வழங்குகிறது.
தனிப்பட்ட தரவு: Google Meetடைப் பயன்படுத்த, உங்கள் பெயர், மின்னஞ்சல் முகவரி, மொபைல் எண் ஆகியவற்றை வழங்க வேண்டும். நீங்கள் Google Meetடைப் பயன்படுத்தும்போது Google சேகரிக்கும் தனிப்பட்ட தரவுகள் பற்றி மேலும் தகவலறிய Google தனியுரிமைக் கொள்கையை (https://policies.google.com/privacy தளத்தில் உள்ளது) பார்க்கவும். Google தனியுரிமைக் கொள்கை என்பது, உங்களுக்கும் Googleளுக்கும் இடையிலான ஒப்பந்தத்தின் ஒரு பகுதியோ இந்தச் சுருக்கவிவரத்தின் ஒரு பகுதியோ இல்லை.

[1]ஆர்டிகிள் 102(3) ஆஃப் டைரக்டிவ் (EU) 2018/1972 ஆஃப் தி யூரோப்பியன் பார்லிமெண்ட் அண்ட் ஆஃப் தி கவுன்சில் ஆஃப் 11 டிசம்பர் 2018 எஸ்டாபிளிஷிங் தி யூரோப்பியன் எலக்ட்ரானிக் கம்யூனிகேஷன்ஸ் கோட் (OJ L 321, 17.12.2018, p. 36).